பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 23 வெள்ளிக்கிழமை 07.08.2020 கதிர் 142

## ஐ.தே.கவின் பதவிகளில் மாற்றம்!

கொழும்பு, ஒக. 07

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படு மென அந்தக் கட்சியின் பதில் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

2



# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசுடன் சேர்ந்து பயணிக்க தயார்

### திருமலையில் சம்பந்தன் அறிவிப்பு

திருமலை, ஒக. 07

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசுடன் சேர்ந்து பயணிக்கத் தயார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 9 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்று வெற்றி ஈட்டியதைத்தொடர்ந்துஇன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் விசேட பூசை இடம்பெற்றது.

இந்த வழிபாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்

2

## திருமலையில் கடற்படை வீரர் திடீரென மயங்கி விழுந்து சாவு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமில் கடமையாற்றி வந்த கடற்படை வீரரொருவர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையை அடுத்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தரமுயர்வுக்கான பரீட்சார்த்தப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இன்று அவருக்கு மயக்க நிலை ஏற்பட்டதாகவும், அதனையடுத்து கடற்படை வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார் எனவும், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

2



# இணைந்து செயற்பட வாருங்கள்!

### விக்கி, கஜனுக்கு சுமந்திரன் பகிரங்க அழைப்பு





**(எஸ். நிதர்ஷன்)**

**யாழ்ப்பாணம், ஒக. 07**

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக்கொள்கின்றோம். அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் மக்கள் அளித்த ஆணையையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களின் நெருக்கடியான காலகட்டத்தில் எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

2

## தமிழரசின் தலைமையே தோல்விக்குக் காரணம்!

### கட்சி மறுசீரமைப்பு அவசியம் என சுமந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 07

மக்களின் ஆணையின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் மிக மோசமாகத் தோற்றிருக்கின்றார்கள். அதனை நாங்கள் கருத்திலே எடுத்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையின் செயற்றிறன் இன்மையே

2

## ரவிராஜ் சிலைக்கு கறுப்புத் துணி போர்த்தி சாவகச்சேரியில் எதிர்ப்பு





யாழ்ப்பாணம், ஒக. 07

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப் பகுதி கறுப்பு துணியால் மூடப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் நடராஜா ரவிராஜின் மனைவி சசிகலா கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல்

2

## ஐ.தே.கவுக்கு படு தோல்வி

கொழும்பு, ஒக. 07

நடைபெற்று முடிந்த இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஆளும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி படு தோல்வியைச் சந்தித்துள்ளதுடன், நாடாளுமன்றில் மாவட்ட ரீதியில் ஓர்ஆசனத் தைக் கூடப் பெற்றுக் கொள்ளத் தவறியது.

அத்துடன் கடந்த 2015 பொதுத் தேர்தலில் 5 இலட்சம் விருப்பு வாக்குகளுடன் கொழும்பு மாவட்டத்தில் அமோக வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது 42 வருட கால அரசியல்வரலாற்றில் முதல்தடவையாகத் தோல்வியைத் தழுவினார்.

2

## 145 ஆசனங்கள் மொட்டுக்கு!

கொழும்பு, ஒக. 07

பொதுத்தேர்தலில் 68 லட்சத்து 53 ஆயிரத்து 690 வாக்குகளைப்பெற்று 128 ஆசனங்களைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி வெற்றி வாகை சூடியுள்ளது.

அந்தக் கட்சிக்கு 17 தேசியப் பட்டியல் ஆசனங்களும் பகிரப்பட்டுள் ளன. இதன்படி மொத்தமாக 145 ஆசனங்களை மொட்டு கட்சி பெற்றுள்ளது.

சஜித் பிரேதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியானது 27 லட்சத்து 71 ஆயிரத்து 980

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 145 ஆசனங்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளைப்பெற்று 47 ஆசனங்களைக் கைப்பற்றியது. 7 தேசியப்பட்டியல் ஆசனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி அக்கட்சிக்கு மொத்தமாக 54 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

3 லட்சத்து 27 ஆயிரத்து 168 வாக்குகளைப்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, ஒரு தேசியப்பட்டியல் உட்பட 10 ஆசனங்களை வென்றுள்ளது. தேசிய மக்கள்சக்திக்கு தேசியப்பட்டியல் உள்ளடங்களாக 3 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒரு ஆசனத்தை வென்றி நிலையில்தேசியப்பட்டியலும்வழங்கப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. 0.53 வாக்குவீதத்துடன் 2 ஆசனங்களை வென்றுள்ளது.

அத்துடன், தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டணி, தேசிய காங்கிரஸ் மற்றும் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன தலா ஒரு ஆசனம்வீதம் பெற்றுள்ளன.

## திருமலையில் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்தவர் பூனேவ - ஆணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 34 வயதுடையவர்எனவும்தெரியவருகின்றது.

இந்தக் கடற்படை வீரரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனத் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## நிரந்தர சமாதானத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பொன்று அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன்,

இம்முறை இடம்பெற்ற தேர்தலை ஒரு ஜனநாயகத் தேர்தலாக நான் கருதவில்லை. மக்களுக்கு பணம் வழங்கி நன்கொடை கொடுத்து மதுபானம் வழங்கி ஆளும் கட்சியினர் ஆசனங்களைப் பெற்று கொண்டுள்ளனர்.

சிறிய சிறிய தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டு தமிழ் வாக்குகளைப் பிரித்துள்ளன. இதனால் 20 ஆசனங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும்கூட்டமைப்புக்கு ஒன்பது ஆசனங்களே கிடைத்துள்ளன. இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி. மேலும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நீதியும் மற்றும் கௌரவமான பிரஜையாக வாழ தீர்வு வழங்கப்பட வேண்டும். அதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் நிலைபாட்டைக் கொண்டு எமது இலட்சியத்தை அடைவோம் - என்றார்

## ஐ.தே.கவின் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிகொத்தாவில் இன்று வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ரவி கருணாநாயக்க பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முக்கிய பதவிகளில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம்.

எனவே இந்தக் கூட்டம் தொடர்பான முழுமையான விவரங்களை எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடுவோம் - என்றார்.

## தமிழரசின் தலைமையே தோல்விக்குக் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணம். உடனடியாகக் கட்சியை மறுசீரமைத்து மக்கள் மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவருடைய இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களை வழங்க வேண்டுமென நாங்கள் மக்களிடம் கேட்டோம். இப்போது அதில் அரைவாசி எண்ணிக்கைதான் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அதாவது 10 ஆசனங்கள். இது மிக சொற்பம்.

இது நாங்கள் எதிர்பாராத ஒரு பின்னடைவு. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எங்களுக்கு இப்படியான பின்னடைவு இருந்த போதிலும், அந்தத் தேர்தல் முறைமை ரீதியாக - சூழல் வித்தியாசம் காரணமாக அந்தப் பின்னடைவிலிருந்து மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலுக்கு முகம் கொடுத்தோம்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்துள்ள முறை பல கரிசனைகளை எழுப்புகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே நம்பிக்கை குறைந்துள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அந்த மக்கள் தீர்ப்பை நாம் பொறுப்புணர்வுடன் ஏற்றுக் கொள்வதுடன், அந்த நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாட்டில் உடனடியாக நாங்கள் இறங்குவோம்.

மக்களுடன், அடிமட்ட தொண்டர்களுடனான கலந்துரையாடல்கள், எங்களுக்குள் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலம் பொதுத்தேர்தல் பின்னடைவுக்கான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாகக் கட்சியை மறுசீரமைத்து மக்கள் மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

எங்களுக்கு வாக்களிக்காத மக்கள் வழக்கம் போல் இரண்டு பக்கமும் போயிருக்கிறார்கள் என்றால் அது சரியாக அமையாது. கடும் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பக்கமாக சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் போலித் தமிழ்த் தேசியவாதிகள் என நாங்கள் வர்ணிப்பதுண்டு. ஆனால், அவர்களுக்கும் ஒவ்வொரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஆனால், வடக்கு, கிழக்கை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து பார்க்கின்ற போது, அரசுடன் இணைந்த செயற்படும் அணிகளின் திசையிலும் ஒரு பகுதி மக்கள் கூடியிருக்கின்றார்கள். அதன் ஒரு பிரதிபலிப்பாக அம்பாறையில் இம்முறை ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும் கிடைக்காமல் போயுள்ளது.

மட்டக்களப்பில் நாம் 2 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். வன்னியில் 3 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். எல்லாவற்றையும் விட மோசமாக யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் வெளியே எங்களை விட அதிக ஆசனங்களாக 4 உள்ளன.

இந்தப் பின்னடைவு சம்பந்தமாக கட்சிக்குள் சில கலந்துரையாடல்களை நடத்துவோம். அதிலும் முக்கியமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர் பொதுத் தேர்தலில் தோற்றிருக்கின்றார்கள். ஆகவே, தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக் குள் உள்ள பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைமை தோற்றதாக கருதலாம். அவர்கள் ஒருசில வாக்குகளால் தோற்கவில்லை. அவர்கள் மோசமாகத் தோற்றுள்ளார்கள். ஆகவே, அது குறித்தும் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

இந்த பின்னடைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடும் நிச்சயமாக ஒரு காரணமாக அமைந்தது. வெளி அழுத்தங்களுக்கு மேலதிகமாக, கட்சிக்குள் ஒற்றுமையின்மையும், ஒரு சிலரைத் தோற்கடிக்க வேண்டுமென பகிரங்கமாகக் கூறிச் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இது சம்பந்தமாகவிமலேஸ்வரிஎன்றபெண்ணுக்கு எதிராக மட்டுமே கட்சி நடவடிக்கை எடுத்தது. அதைத்தவிர, பதவியில் இருந்த கட்சி அங்கத்தவர்கள் பலர் கட்சி வேட்பாளர்கள் குறித்து தாக்கிப் பேசியும், எழுதியும் வரப்பட்டது. இது குறித்து நான் கட்சித் தலைமையிடம் பல தடவை கூறியிருக்கின்றேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிறிதரன் பலமுறை கட்சித் தலைமையிடம் முறையிட்டார். எழுத்திலும் ஆதாரங்களுடன் கட்சித் தலைவரிடம் தெரிவித்தார். அவர்கள் எவருக்கு எதிராகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஓர் அரசியல் கட்சி தேர்தலைச் சந்தித்தபோது, அந்தக் கட்சிக்குள் இருந்தே, கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமான தவறு. அவர்கள் உடனடியாகக் கட்சியை விட்டு நீக்க வேண்டிய பாரதூரமான விடயம். அவர்களைக் கட்சியை விட்டு நீக்காதது கட்சியின் பாரதூரமான பின்னடைவுக்குக் காரணம்.

கட்சிக்குள் உள்ளிருந்து கொண்டு, சொந்தக்கட்சிக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமானது. இந்த விடயம் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம்.

அவர்கள் யாரைத் தோற்கடிக்க வேண்டுமெனக் குற்றஞ்சாட்டினார்களோ, அவர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இறுதி நாட்களில் கூட, சிறிதரனையும், சுமந்திரனையும் தோற்கடிக்க வேண்டும் எனத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் இதை வெற்றியாகச் சொல்ல முடியாது.

இனிவரும் நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுச்சி இளைஞர்களின் கையில் உள்ளது. ஒரு மாற்றம் வேண்டுமென்பதைத் தெட்டத்தெளிவாக மக்கள் கட்சிக்கு அடித்துரைத்துள்ளனர். அதனால் அது நடைபெற வேண்டும். மக்களின் நம்பிக்கையை எங்கள் மீது சுமத்தியுள்ளதன் காரணமாக மக்களால் கொடுக்கப்பட்ட அந்த ஆணையை நாம் சிரம் மேல் கொண்டு, கட்சி மீளெழுச்சியையும் நாங்கள் பொறுப்பேற்று முன்கொண்டு செல்வோம் - என்றார்.

## ரவிராஜ் சிலைக்கு .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்யப்பட்டு அவர் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் எனச் சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து, சசிகலாவும்தான் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டு உள்ளதாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இன்று காலை சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப் பகுதி கறுப்புத் துணியினால் மூடப்பட்டுள்ளதுடன், கைகள் மற்றும் கால்கள் சிவப்பு மஞ்சள் துணியினால் கட்டப்பட்டுள்ளன.

# அம்பாறையில் 4 முஸ்லிம்கள் மூன்று சிங்களவர்கள் வெற்றி

## தமிழ் பிரதிநிதித்துவம் 'அவுட்'

*நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 4 முஸ்லிம்களும், 3 சிங்களவர்களும் தெரிவாகியுள்ளனர். அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை கிடைக்கவில்லை.*

*ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் விமலவீர திஸாநாயக்க (63,594), டீ.சி வீரசிங்க (5,600), திலக் ராஜபக்ச (54,203) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.*

*ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.எச்.எம் ஹரீஸ் (36,850), பைசல் காசீம் (29,423) ஆகியோரும், தேசிய காங்கிரஸ் சார்பில் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் (35,697) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

*அதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் புது முகமான மொஹமட் முஸாரப் (18,389) வெற்றி பெற்றுள்ளார்.*

## ஐ.தே.கவுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 674,603 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 387,145 வாக்குகளையும் தேசிய மக்கள் சக்தி 67,600 வாக்குகளையும் பெற்றுக்கொண்ட அதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி 30,875 வாக்குகளையேபெற்றுள்ளது. இதன் மூலம் கட்சி 5 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றது.

இந்நிலையில் தேர்தல் சட்டத்தையும் மீறி விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கு ஐக்கிய தேசிய கட்சியினால் முயற்சிக்கப்பட்டதாக சஜித்தரப்பினரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதுடன் இது தொடர்பாக நேற்று நள்ளிரவில் விசேட அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டிருந்தது.

## இணைந்து செயற்பட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தப் பகிரங்க அழைப்பை அவர் விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 பேராகவே அமரப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரகுமாருடன் இன்னொருவர் நாடாளுமன்றம் வரவுள்ளனர். அவர்கள் எங்களோடு இணைந்து அல்லது நாங்கள் அவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்த நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ளவுள்ள சவால் என்பது மிக பெரியது. அதை நாம் இணைந்து எதிர்கொள்ள வேண்டும். உங்கள் மீதும் நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்துள்ளனர். உங்களுக்கு மக்கள் கொடுத்த ஜனநாயகத் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்வதைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 10 ஆசனங்கள் கொடுத்துள்ள மக்களின் ஜனநாயகத் தீர்ப்பையும் நீங்கள் மதிப்பீர்கள் என நம்புகின்றேன்.

நாங்கள் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக எழுந்துள்ள இந்தப் பாரிய சவாலை முறியடிக்க - சேர்ந்து பயணிக்க எங்களுடைய கதவுகள் திறந்துள்ளன - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரக்கூடிய அரசமைப்பு மாற்றம்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ராஜபக்ஷக்களின் கைகளைப் பலப்படுத்தியுள்ளது.

அரசமைப்பு மாற்றங்களைச் செய்வதற்காக எமக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தாருங்கள் என்று கோரினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும்.

அவர்கள் கேட்டதை வாரியிறைத்திருக்கின்றார்கள் தென்னிலங்கைச் சிங்கள மக்கள்.

அவர்களது பொதுஜன பெரமுனவுக்கு 145 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அதன் கூட்டுக்கு வெளியிலிருந்து தேர்தலில் போட்டியிட்ட தோழமைக் கட்சிகளுக்குக் கிடைத்த ஆசனங்களுடன் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்குத் தேவையான நூற்றியைம்பது என்ற இலக்கை ராஜபக்ஷக்கள் இலகுவாக எட்டிவிட்டனர்.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி., சு.கவில் தெரிவான அங்கஜன் இராமநாதன், தமிழ் மக்கள் விடுதலைக் கட்சியில் தெரிவான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), தேசிய காங்கிரஸின் அதாவுல்லா என்று தேவையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ராஜபக்ஷக்களுக்கு உண்டு.

இந்த நூற்றியைம்பது என்ற தேவையான எண்ணிக்கையை ராஜபக்ஷக்கள் எட்டுவதற்கு அவரது பொதுஜன பெரமுனவுக்கு வெளியில் இருந்த உதவ நான்குக்கும் அதிகமான வடக்கு, கிழக்குத் தமிழர்கள் தயாராக உள்ளனர்.

இந்தச் சூழலில்தான், அரசமைப்பைத் திருத்துதல் அல்லது மாற்றியமைத்தல் என்ற திட்டத்தில் ராஜபக்ஷக்களின் புதிய அரசு இறங்கப் போகின்றது.

புதிய அரசமைப்பை மாற்றும் விவகாரத்தில் பல அம்சங்கள் குறித்துப் பேசப்படுகின்றது.

19 ஆவது திருத்தத்தை அடியோடு மாற்றுவது குறித்து முதலில் பேசப்பட்டது. பின்னர் 13 ஆவது திருத்தத்தை நீக்குவது பற்றி வலியுறுத்தப்படுகின்றது.

இவற்றில் எதனை அல்லது இரண்டையும் ஒன்றாக முன்னெடுக்க ராஜபக்ஷக்கள் முயலுவார்களா என்பதே கேள்வி.

அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வது பற்றியது. அதிலே இருக்கின்ற சில முக்கிய விடயங்கள் ராஜபக்ஷக்களுக்குப் பெரும் உறுத்தலாக இருப்பது வெளிப்படையானது.

குறிப்பாக மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் அந்தத் திருத்தம் மூலம் பகிரப்பட்டிருக்கின்றமை ஏற்றுக் கொள்ள முடியாதது என்பது அவர்களின் நிலைப்பாடு. 1987 இல் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் அந்த அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப் பட்டனவாயினும் 33 ஆண்டுகளாகியும் அவை நடைமுறைப்படுத்தப் படவேயில்லை.

எனினும் இப்போது தமக்குக் கிடைக்கும் இந்தச் சந்தர்ப்பம் மூலம் அதனை நீக்கி விடத் துடிக்கின்றனர் ராஜபக்ஷக்கள்.

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் இலக்கிலேயே இந்த 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது என்பதால், அதனைத் தம்மிஷ்டப்படி மாற்றுவதற்கு இந்தியா இணங்குமா – அனுமதிக்குமா – அல்லது பார்த்திருக்குமா – என்பதுதான் இப்போதைய கேள்வி.

2010 செப்ரெம்பரில் இதே போன்ற ஒரு முயற்சியை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்க முயன்றபோது அதை அப்போதைய இந்திய அரசு தலையிட்டு மறித்தது என்பது நினைவு கூரப்பட வேண்டிய விடயம்.

புதிய சர்வதேச களநிலைமையில் அதே உறுதியான நிலைப்பாட்டை இப்போதும் புதுடில்லி எடுக்குமா அல்லது இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தைத் தவிர்க்கச் செய்யும் இலங்கையின் இணக்கத்துக்கான விட்டுக் கொடுப்பாக – சமரசமாக – 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை கொழும்பு நீக்குவதை, அது உள்நாட்டு விவகாரம் என்று புதிய அர்த்தத்தைக் கொடுத்துப் பார்த்திருக்குமா என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடுத்தது – 19 ஆவது திருத்தம். அது நீக்கப்படும் என மொட்டுக் கட்சித் தரப்பில் ஆரவாரமாக அறிவிக்கப்பட்டு வந்தாலும் ராஜபக்ஷக்களின் குழப்பம் அங்குதான் உண்மையில் ஆரம்பிக்கப் போகின்றது.

பல்வேறு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல், நாடாளுமன்றத்தின் பதவிக் காலம், அதனைக் கலைப்பது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களை 19 ஆவது திருத்தம் கையாண்டாலும் –

அது உண்மையில் ஜனாதிபதியின் பல அதிகாரங்களை வெட்டிக் குறைத்து, அவற்றை பிரதமருக்கு அல்லது நாடாளுமன்றுக்குக் கையளிக்கின்றது என்பதுதான் உண்மை நிலையாகும்.

மிக வலுவான நாடாளுமன்றத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்த அதிகாரங்களை இலகுவாகத் தம்பியாரிடம் – ஜனாதிபதி கோட்டாபயவிடம் – தாம் இழக்க விரும்புவாரா என்பதுதான் சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

மஹிந்த ராஜபக்ஷ தன் அதிகாரங்களை ஜனாதிபதியிடம் தாரை வார்க்க இணங்கிச் செயற்படுவாரா? காலம்தான் பதில் கூற வேண்டும்.

# திருகோணமலையில் சம்பந்தனுக்கு 21 ஆயிரத்து 422 விருப்பு வாக்குகள்






திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அதன் தலைவர் இரா.சம்பந்தன் 21 ஆயிரத்து 422 விருப்பு வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தில் உள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தெரிவான எஸ்.எம் தெளபீக் 43 ஆயிரத்து 759 வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்திலும், இம்ரான் மஹ்ரூப் 39 ஆயிரத்து 29 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் தெரிவான கபில நுவன் அத்துகோரல 30 ஆயிரத்து 56 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளார்.

# வன்னியில் ரிஷாத்துக்கு அதிக விருப்பு வாக்குகள்

## சார்ள்ஸ் இரண்டாம் இடம்








வன்னி,ஓக.07

வன்னி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவருக்கு 28 ஆயிரத்து 203 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான சார்ள்ஸ் நிர்மலநாதன் 25 ஆயிரத்து 668 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் தெரிவான ஏனைய உறுப்பினர்களான செல் வம் அடைக்கலநாதன் 18 ஆயிரத்து 563 வாக்குகளையும், எஸ்.வினோநோகராதலிங்கம் 15 ஆயிரத்து 190 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் தெரிவான காதர் மஸ்தான் 13 ஆயிரத்து 454 வாக்குகளையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தெரிவான குலசிங்கம் திலீபன் 3 ஆயிரத்து 203 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

## நல்லூரில் இன்று....






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த வலியுறுத்தி துருக்கியில் ஆர்ப்பாட்டம்



துருக்கியில், பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தும் சட்டங்களை கடுமையாக்கும்படி கோரி நூற்றுக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவும், பாலின சமத்துவத்தை நிலைநாட்டவும் சில புதிய சட்டங்களை கடந்த 2011 ஆம் ஆண்டு, துருக்கி அரசு இயற்றியது. இதற்கு சில பழமைவாதிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், அச்சட்டங்களை ரத்து செய்வது குறித்து அதிபர் **Tayyip Erdogan** பரிசீலித்து வந்தார்.

இந்நிலையில், **Pinar Gultekin** என்ற கல்லூரி மாணவி தன் காதலனால் எரித்துக் கொல்லப்பட்டதால், பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் சட்டங்கள் தொடர்ந்து அமுலில் இருக்க வலியுறுத்தி ஏராளமான பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சீனாவில் கொலை வழக்கில் 27 ஆண்டுகள் தவறாகச் சிறை வைக்கப்பட்டவர் விடுதலை



சீனாவில் 1993 ஆம் ஆண்டு இரு சிறுவர்களை கொலை செய்த வழக்கில் ஜாங் யுகுவான் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக விசாரணை நீதிமன்றம் கருதி 1995 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. ஆனால் அவர் 2 ஆண்டு காலம் சிறைத்தண்டனை அனுபவித்த நிலையில், அவரது மரண தண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

மொத்தத்தில் அவர் இந்த வழக்கில் 27 ஆண்டு காலமாக சிறைவாசம் அனுபவித்து வந்தார். ஆனால் அவர் பொலிஸாரின் சித்திரவதையால் 2 சிறுவர்களையும் தான் கொலை செய்தார் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க நேர்ந்தது என்பதுதான் உண்மை. இந்த வழக்கு குறித்து சந்தேகங்கள் எழுந்து மறு விசாரணை நடந்தது. உயர் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையில், அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் இருக்கின்றன எனவும் அது நடந்த குற்றத்துடன் பொருந்திவரவில்லை என்றும் வாதிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவர் மீதான கொலைக்குற்றச்சாட்டை நிரூபிக்க தகுந்த ஆதாரம் இல்லை என்று உயர் நீதிமன்றத்தில் கூறி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. இதையடுத்து அவர் ஜியாங்சி மாகாணத்தில் உள்ள சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட ஜாங் யுகுவானை 2 ஆண் குழந்தைகளை பெற்றெடுத்த நிலையில், 11 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது மனைவி சாங் ஸியான்யு விவாகரத்து செய்து விட்டு மறுமணம் செய்து கொண்டார்.

ஆனாலும் தனது முன்னாள் கணவர், கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டதில் இருந்து வெளியே வர தன்னால் ஆன சட்ட உதவிகளை செய்துள்ளார் என்பதுவும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. கடைசியில் தனது முன்னாள் கணவர் நிரபராதி என நீதிமன்றத்தில் இப்போது விடுதலை செய்யப்பட்டிருப்பது கண்டு அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

இதுபற்றி அவர் கூறும்போது, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கேட்டபோது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன் என்றார். தவறாக சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்ததற்காக ஜாங் யுகுவான் இழப்பீடு பெற முடியும் என்று நீதிமன்றம் கூறி உள்ளது. எவ்வளவு இழப்பீடு கோருவது என்பதை ஜாங் யுகுவானிடம் கலந்து பேசி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவரது வக்கீல் வாங் பெய் தெரிவித்தார்.

கொலை வழக்கில் 27 ஆண்டு காலம் தவறான சிறைவாசம் அனுபவித்து ஜாங் யுகுவான் விடுதலையாகி இருப்பது சீனாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தவறான தகவலைப் பதிவிட்டாராம் ட்ரம்பின் ட்விட்டர் கணக்கு முடக்கம்



கொரோனா வைரஸ் குறித்த தவறான தகவலைப் பதிவிட்ட காரணத்துக்காக அமெரிக்க அதிபர் ட்ரம்பின் ட்விட்டர் கணக்கு முடக்கப்படுள்ளது.

ட்ரம்ப் தனது தேர்தல் பிரசார ட்விட்டர் கணக்கில் பகிர்ந்திருந்த வீடியோவில், குழந்தைகளுக்கு வலுவான எதிர்ப்பு சக்தி உள்ளதால் பள்ளிகள் திறக்கலாம் எனவும், அவர்களுக்கு கொரோனா எளிதில் பரவாது எனவும் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து முற்றிலும் தவறானது எனமருத்துவநிபுணர்கள்தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா குறித்து தவறான தகவலை பதிவிட்டதால் அவரது பதிவை முதன்முறையாக நீக்கி பேஸ்புக் நிறுவனம், ட்விட்டர் கணக்கும் முடக்கப்பட்டு உள்ளது.

# 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் பெய்ரூட்டுக்கு வந்து சேர்ந்தது எப்படி?





லெபனான் தலைநகர் பெய்ரூட் துறைமுகத்தில் 6 ஆண்டுகளாக சேமித்து வைக்கப்பட்டிருந்த அமோனியர் நைட்ரேட் வெடித்து சிதறியதால் 145 பேர் இறந்தனர் . கிட்டத்தட்ட 5000 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ரஷ்யாவின் ஜோர்ஜியாவிலுள்ள **Rustavi Azot LLC** என்ற நிறுவனத்திலிருந்து மொசாம்பிக் நாட்டை சேர்ந்த **Fabrica de Explosivos** என்ற நிறுவனத்துக்கு அமோனியம் நைட்ரேட்டை ஏற்றிக் கொண்டு **Rhosus** என்ற கப்பல் சென்று கொண்டிருந்தது. ரஷ்ய தொழிலதிபர் **Igor Grechushkin** என்பவர் நடத்தி வந்த **Teto Shipping** நிறுவனத்துக்கு இந்த கப்பல் சொந்தமானது. கப்பலின் கப்டனாக போரீஸ் புரேகோவே் என்பவர் இருந்துள்ளார். நான்கு வாரங்கள் கழித்து ஏதென்ஸ் நகருக்கு இந்த கப்பல் வந்துள்ளது. அங்கிருந்து மொசாம்பிக் நோக்கி பயணித்து கொண்டிருக்கையில், அதன் உரிமையாளர் கப்பல் கப்டனை அழைத்து பெய்ரூட் சென்று அங்கிருந்து கனரக சரக்குகளை ஏற்றி கொண்டு ஜோர்டானிலுள்ள ஆஹாபா துறைமுகத்தில் சேர்க்க உத்தரவிட்டுள்ளார்.

இதனால், மத்திய தரைக்கடல் வழியாக பயணித்து **Rhosus** கப்பல் பெய்ரூட் சென்றுள்ளது. அப்போது, கூடுதல் சரக்குகளை ஏற்றுவதில் உள்ள தொழில்நுட்ப பிரச்சினையால் பெய்ரூட் துறைமுக அதிகாரிகள் கப்பலை பறிமுதல் செய்துள்ளனர். கப்பல் உரிமையாளரும் துறைமுக கட்டணம் செலுத்த மறுத்துள்ளார். பிறகு கப்பல் உரிமையாளர் அந்த கப்பலை அப்படியே விட்டு விட்டார். இதனால், கப்பலிலிருந்து 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் பாதுகாப்பு காரணங்களுக்காக துறைமுகத்திலுள்ள 12 ஆம் எண் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டது. கப்பல் கப்டன் போரிஸ் புரேகோவே் உள்ளிட்ட ஊழியர்கள் 11 மாதங்கள் பெய்ரூட்டில் சட்டப்பேராட்டம் நடத்தி, பிறகு, விடுவிக்கப்பட்டனர். கப்பல் அப்படியே கை விடப்பட்டது. இந்த கப்பல் மட்டும் பெய்ரூட் நகருக்கு செல்லாமலிருந்திருந்தால், இப்படி ஒரு விபத்தே நடந்து இருக்காது. ஆனால், கப்பல் உரிமையாளரின் பண ஆசை காரணமாக பிரச்னையில் சிக்கி 145 உயிர்கள் பலியாகி விட்டது.

ரஷ்யாவின் சோச்சி நகரில் தற்போது வசித்து வரும் ரோஸஸ் கப்பல் கப்டன் போரீஸ் புரேகோவே் கூறுகையில்

“விபத்தில் இறந்தவர்களுக்காக நான் வருத்தமும் வேதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெய்ரூட் துறைமுகத்தில் ரோடு ரோலர்கள் உள்ளிட்ட சில கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்ல எங்களுக்கு உத்தரவிடப்பட்டது. கப்பலும் பழையது. ஆனால், கப்பல் உரிமையாளர் எடுத்த முடிவில்தான் நாங்கள் பெய்ரூட் செல்ல வேண்டிய நிர்பந்தம் உருவானது. கப்பல் பிடிபட, பெய்ரூட்டில் எங்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. ரஷ்ய அதிபர் புடினுக்கு கடிதம் எழுதியும் எந்த பலனுமில்லை. சட்டப் போராட்டத்துக்குப் பிறகு எங்களை விடுவித்தனர். கையில் பணமும் இல்லை. சம்பளமும் கிடைக்கவில்லை. அதையெல்லாம் விட இப்போது சேமித்து வைக்கப்பட்டிருந்த அமோனியம் நைட்ரேட் வெடித்து பெய்ரூட் நகரத்தில் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளமை மிகுந்த வேதனை தருகிறது. இந்த விபத்துக்கு காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்.” - என்று தெரிவித்துள்ளார்.

# மூணாறில் விடிய விடியப் பெய்த கனமழை மண் சரிவில் புதைந்த 80 தொழிலாளர்கள்

## 6 பேர் உயிருடனும், 15பேர் சடலங்களாகவும் மீட்பு

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம் மூணாறு பகுதியில் பெய்த பேய் மழையால் ஆற்றுப் பாலம் அடித்துச் செல்லப்பட்டதோடு, அதிகாலையில் ஏற்பட்ட நிலச்சரிவில் புதைந்து 80 பேர் வரை இறந்திருக்கலாம் எனும் அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கடந்த சில நாள்களாகவே கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக இடுக்கி, பத்தனம்திட்டா, வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் முதலே கனமழை விடாமல் பெய்து வருகிறது. இதனால், சாலைகளில் மண் சரிந்து, மரம் முறிந்து விழுந்து பல்வேறு இடங்களில் மின்சாரம், போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில், மூணாறிலிருந்து 28 கி.மீ தொலைவில் உள்ள ராஜமலை அருகேயுள்ள பெட்டிமடா என்கிற இடத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 80க்கும் மேற்பட்டோர் குடியிருப்புகளில் தங்கியிருந்தனர். மூணாறு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் இன்று அதிகாலை, யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த



நிலச்சரிவில் நான்கு லைன் குடியிருப்புகள் மண்ணில் புதைந்தன. இதில் வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்த 80 பேர் அப்படியே மண்ணில் புதைந்துவிட்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்தவர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தப் பகுதியில் இன்னும் கன மழை பெய்துவருவதால் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் நீடித்து வருகிறது. தொடர் மழையால் பெரியவாரைப் பகுதியில் ஆற்றுப் பாலம் ஒன்று அடித்துச் செல்லப்



பட்டது. இதனால், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு மீட்புக் குழுவால் விரைந்து செல்ல முடியவில்லை. மீட்புப் பணியில் இதுவரை 15 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும், 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# திருப்பதி பிரதான அர்ச்சகர் கொரோனாவால் மரணம்

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த திருப்பதி ஏழுமலையான் கோயிலின் பிரதான அர்ச்சகரான சீனிவாச ஆச்சார்யலு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா நோய் பரவல் தாக்கத்தால் இந்தியா முழுவதும் மார்ச் மாதத்தில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அப்போது திருப்பதி திருமலை, ஸ்ரீரங்கம், சிதம்பரம் உள்ளிட்ட கோயில்களும் மூடப்பட்டன. பக்தர்கள் தரிசனம் செய்யத் தடைவிதிக்கப்பட்டு அர்ச்சகர்கள் மட்டும் கோயிலுக்குள் சென்று பூஜைகள் செய்து வந்தனர்.

கொரோனா ஊரடங்கால், சில மாதங்கள் திருப்பதி ஏழுமலையான் கோயில் மூடப்பட்டிருந்த நிலையில் ஜூன் மாதம் 11 ஆம் திகதி கடும் கட்டுப்பாடுகளுடன் நடை திறக்கப்பட்டது. சமூக இடைவெளியுடன் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதையடுத்து கொரோனா பரிசோதனை மேற்கொண்டபோது திருப்பதி தேவஸ்தானத்தில் பணியாற்றிய 50 பொலிஸார் அர்ச்சகர்கள் உள்பட 150 க்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து திருப்பதியில் மீண்டும் ஊரடங்கு கடுமையாக அமல்படுத்தப்பட்டது.

இந்த சூழலில் தான் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பூஜைகள் செய்து வந்த பிரதான அர்ச்சகர் சீனிவாச ஆச்சார்யலுவுக்கு காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்றுவந்த சீனிவாச ஆச்சார்யலு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

திருப்பதியில் கொரோனா நோய்த் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை சுமார் 7,000 க்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலிலும் திருப்பதி கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் உசாவல்



சீனாவுடனான பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், குவாட் எனப்படும் 4 நட்பு நாடுகளின் கூட்டத்தை விரைவில் நடத்துவது குறித்து வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோவும் விவாதித்துள்ளனர்.

தொலைபேசி வாயிலாக நேற்றிரவு நடந்த இந்த ஆலோசனை குறித்து ஜெய்சங்கர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதுபற்றி அறிக்கை வெளியிட்டுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சகம், இந்திய – சீன எல்லை பிரச்சினை மற்றும் தென் சீன கடலில் சீனாவின் ஆதிக்கத்தை மறைமுகமாக குறிப்பிட்டு, இந்த பிராந்தியத்தில் நடந்த நிலைகுலையவைக்கும் செயல்களை சமாளிப்பது பற்றி இரு நாட்டு அமைச்சர்களும் விவாதித்தனர் எனத் தெரிவித்துள்ளது.

குவாட் சந்திப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் பங்கேற்கும். அதே நேரம் இந்தச் சந்திப்பை சந்தேக கண்ணுடன் சீனா பார்த்தாலும், எந்த நாட்டுக்கும் இது எதிரானது அல்ல என இந்திய அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

# 740 மெட்ரிக் தொன் அமோனியம் நைட்ரேட் சென்னை கிடங்கில் 6 வருடங்கள் தேக்கம்!

## 3 நாளில் அகற்ற சுங்கத்துறை ஆணையருக்கு உத்தரவு!!

சென்னை மணலி வேதிக்கிடங்கில் உள்ள அமோனியம் நைட்ரேட் பாதுகாப்பு குறித்து மத்திய அரசு அதிகாரிகள் 2 ஆவது நாளாக ஆய்வு மேற்கொண்டனர். இதன்போது, மணலி கிடங்கில் (களஞ்சியத்தில்) உள்ள 740 மெட்ரிக் தொன் அம்மோனியம் நைட்ரேட்டை 3 நாளில் அகற்ற சுங்கத்துறை ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

லெபனானில் உள்ள துறைமுகத்தில் 2750 மெட்ரிக் தொன் அமோனியம் நைட்ரேட் 6 ஆண்டுகளாக வைத்திருந்த காரணத்தினால் இரு தினங்களுக்கு முன்பு திடீரென வெடித்து சிதறியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவமானது உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தற்போது சென்னை துறைமுகத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 740 மெட்ரிக் தொன் அமோனியம் நைட்ரேட்டானது பறிமுதல் செய்யப்பட்டு துறைமுகத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருப்பதாக பரபரப்பான செய்தி ஒன்று வெளியானது. இதுதொடர்பாக சுங்கத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது 6 வருடமாக இந்த அமோனியம் நைட்ரேட்டானது பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து லெபனானில் நடைபெற்ற சம்பவத்தை போன்றே சென்னையிலும் வெடி விபத்து நடந்து விடுமோ என்ற அச்சம் மக்களிடையே அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நேற்றிலிருந்து துறைமுக அதிகாரிகளும், சுங்கத்துறை அதிகாரிகளும் வெடிமருந்து வைக்கப்பட்டுள்ள மணலி பகுதியில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.




இந்த நிலையில் தற்போது மணலி கிடங்கில் உள்ள 740 மெட்ரிக் தொன் அம்மோனியம் நைட்ரேட்டை 3 நாளில் அகற்ற சுங்கத்துறை ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



# உண்ணிகள், ஈக்களின் மூலம் சீனாவில் பரவும் புதிய வைரஸ்

## அறுபது பேர் பாதிப்பு; ஏழு பேர் பலி!

சீனா, உகான் மாகாணத்தில் தோன்றி உலகம் முழுவதும் பரவி பெருந்துயரத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது, கொரோனா வைரஸ். உலகம் முழுவதும் கொரோனா நோய்த் தொற்றால் இது வரை ஏழு லட்சத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்; சுமார் 2 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



கொரோனாவின் கோரப்பிடியே இன்னும் குறையாத நிலையில் டிக் - போர்னே எனும் புது வகை வைரஸ் ஒன்று கிழக்கு சீனாவைச் சேர்ந்த ஜியாங்சு, அன்ஹுய் மாகாணங்களில் வேகமாகப் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் இதுவரை 60 பேருக்குப் பரவி ஏழு பேரின் உயிரைப் பறித்துள்ளது. இந்த வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவும் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் மருத்துவ நிபுணர்கள்.

ஜியாங்சு மாகாணத்தைச் சேர்ந்த நஞ்சிங் என்ற பெண் காய்ச்சல் மற்றும் சளி காரணமாக மருத்துவமனைக்குச் சென்றார். கொரோனா நோய் பரிசோதனை மேற்கொண்ட போது அவருக்கு நெகட்டிவ் என்று ரிசல்ட் வந்துள்ளது. தொடர் சிகிச்சைப் பெற்ற பிறகும் காய்ச்சல் குணமாகவில்லை. அவரது ரத்தத்தில் ரத்த வெள்ளையணு மற்றும் தட்டு அணுக்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாகக் குறைந்ததை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். ஒரு மாதத் தீவிர சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்து வீடு திரும்பினார் நஞ்சிங்.



அதன்பிறகு, இவரைப்போன்றே ரத்த வெள்ளையணு மற்றும் தட்டு அணு குறைந்து காய்ச்சலுடன் பலர் மருத்துவமனைகளில் தொடர்ச்சியாக அனுமதிக்கப்பட்டனர். இந்த வகை நோய் அறிகுறிகளுக்கு **Severe Fever with Thrombocytopenia Syndrome** என்று பெயர். அவர்களின் ரத்த மாதிரிகளை ஆராய்ந்த போதுதான் புது வகை வைரஸ் தொற்றினால் இந்த வகை சிண்ட்ரோம் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் இந்த வைரஸ் **SFTS Virus** என்று அழைக்கப்படுகிறது. இது ஈ, ஒட்டுண்ணி மூலம் மனிதர்களுக்குப் பரவியதால் டிக் போர்னே என்றும் பெயர். இந்த வகை வைரஸ் சீனாவில் 2011 ஆண்டிலேயே கண்டறியப்பட்டாலும் இப் போதுதான் அது பெரிய அளவில் பரவத் தொடங்கியுள்ளது.

டிக் போர்னே வைரஸ் குறித்து மருத்துவ நிபுணர்கள் கூறுகையில், இந்த வைரஸ் கொரோனாவைப் போல சவாலாக மாறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த வைரஸ் உண்ணி, ஈக்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியுள்ளது. மேலும் ரத்தம், சளி, இருமல் மூலமும் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு எளிதில் பரவுகிறது என்று எச்சரித்துள்ளனர்!

# நீல நிறக் கண்களால் பிரிந்து சென்ற கணவர்

## குழந்தைகளுடன் தவிக்கும் நைஜீரிய பெண்!

உலகம் முழுவதும் கண்களின் நிறத்தைக் கொண்டு பல்வேறு பழங்கதைகள் புழக்கத்தில் உள்ளன. நீல நிற கண்களுக்கு எப்போதுமே தனிச் சிறப்பு உண்டு. நீல நிற விழிகளை உடையவர்கள் எளிதில் மற்றவர்களை வசீகரிப்பவர்களாக இருப்பார்கள். தேவதைகள் நீல நிறக் கண்களைத் தான் பெற்றிருப்பார்கள் என்றும் சொல்வார்கள்.



நீல நிற விழிகளைக் கொண்ட பெண்ணைத் திருமணம் செய்தவர், குழந்தைகளும் அதே போன்று நீல நிற விழிகளுடன் பிறந்ததால் குடும்பத்தையே புறக்கணித்துக் கைவிட்டுச் சென்ற அதிர்ச்சிகரமான சம்பவம் நைஜீரியாவின் லாகோஸ் நகரில் நிகழ்ந்துள்ளது.

சுற்றுச் சூழல், கருவிழியில் உள்ள மெலனின் மற்றும் புரோட்டீன்களின் சேர்க்கையைப் பொறுத்து ஒவ்வொரு இடத்தில் உள்ளவர்களும் ஒவ்வொரு நிறங்களைக் கொண்ட கண்களைப் பெற்றிருப்பர். சிலர் மரபியல் ரீதியாகவும் வித்தியாசமான நிறங்களைக் கொண்டவர்களாகப் பிறப்பர். ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட பகுதிகளில் நீல நிறக் கண்களைக் கொண்டவர்களை அதிகம் காணலாம். ஆனால், ஆபிரிக்காவில் நீல நிறங்களைக் கொண்டவர்களைப் பார்ப்பது அரிதானது.

பழமைவாதத்தில் மூழ்கிய ஆபிரிக்கர்கள் மத்தியில் நில நிறக் கண்களை அபச குணமாகவும், குறைபாடாகவும் கருதும் பழக்கமும் இருந்து வருகிறது. நைஜீரியா, லகோஸ் நகரைச் சேர்ந்த பெண்மணி ரிஷிகாட். இவர் நீல நிற கண்களைக் கொண்டவர். இவரை அப்துல்வாய்சூ ஓமோ என்பவர் காதல் திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்குப் பின் இருவரும் அன்பாகத்தான் குடும்பம் நடத்தியுள்ளனர். ஆனால், குழந்தைகளும் ரிஷிகாட்டைப் போலவே நீல நிறத்துடன் பிறந்ததால் இருவருக்குள்ளும் பிரச்சினை அதிகமானது. அப்துல்வாய்சூவின் போக்கு



நாளுக்கு நாள் மாறியது. ஒரு கட்டத்தில் அவர் நீல நிற விழிகளுடன் பிறந்த குழந்தைகளைக் காரணம் காட்டி குடும்பத்தைப் புறக்கணித்துவிட்டுச் சென்றுவிட்டார். குழந்தைகளை வளர்க்கும் நோக்கில் ரிஷிகாட் தன் தாய் வீட்டுக்கு வந்துவிட்டார்.

இது குறித்து ரிஷிகேட், என் குடும்பத்தில் யாருக்கும் நீல நிற விழிகள் இருந்தது இல்லை. எனக்கு தான் இந்தப் பிரச்சினை இருக்கிறது. என் குழந்தைகளும் நீல நிற விழிகளுடன் பிறப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை என்று வேதனையுடன் கூறியுள்ளார்.

நீல நிற விழிகளுடன் பிறந்ததால் கணவனால் புறக்கணிக்கப்பட்ட பெண்ணைப் பற்றி நைஜீரியாவைச் சேர்ந்த ஆலபி ருக்காயத் என்ற கல்லூரி மாணவர் ஒருவர் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார். இந்தத் தகவல் இப்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது!

# கொழும்பில் வென்றனர் மனோ, மரிக்கார், முஜிபுர்

## ‘மொட்டு’வின் சரத் வீரசேகர முன்னிலை

கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 12 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி 06 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் நாடாளுமன் றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் விருப்பு வாக்குப் பட்டியலில் ம ஹிந்த அணியின் சார்பில் விமல் வீரவன்ஸவே முதலிடம் பிடிப்பார். ஆனால், இம்மறை ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பெற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட விருப்பு வாக்குப் விவரம் வருமாறு:-

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன


01) சரத் வீரசேகர - 3,28,092


02) விமல் வீரவன்ச - 2,67,084


03) உதய பிரபாத் கம்மன்பில - 1,36,331


04) விஜேதாஸ ராஜபக்ஷ - 1,20,626


05) பந்துல குணவர்தன - 1,01,644


06) பிரதீப் சமன் குமார - 91,958


07) தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன - 85,287


11) சுசில் பிரேமஜயந்த - 50,321

08) மதுர விதானகெ - 70,205

09) பிரேமனாத் சீ தொலவத்த - 69,055

10) காமினி குலவங்ச லொகுகே - 62,543

12) ஜகத் குமார - 47,693

### ஐக்கிய மக்கள் சக்தி


01) சஜித் பிரேமதாஸ - 3,05,744


02) எஸ்.எம் மரிக்கார் - 96,916


03) முஜிபுர் ரஹ்மான் - 87,589


04) ஹர் டி சில்வா - 82,845


05) சம்பிக்க ரணவக்க - 65,574


06) மனோ கணேசன் - 62,091

### தேசிய மக்கள் சக்தி

01) அநுரகுமார திஸாநாயக்க - 49,814



## பதுளை மாவட்டத்தில் இரு தமிழர்கள் வெற்றி

### செந்தில் தொண்டமான் தோல்வி


வடிவேல் சுரேஷ் - (49,762),


அ.அரவிந்குமார் - (45,491)

பதுளை மாவட்டத்தில் கடந்த முறை மாதிரி இம் முறையும் இரு தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரி வாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ் (49,762), அ.அரவிந்குமார் (45,491) ஆகியோரே வெற்றி பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் முதன்முதலாகப் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தோல்வியடைந்துள்ளார்.

## மட்டக்களப்பில் பிள்ளையான் விருப்பு வாக்குகளில் முதலிடம்


சிவநேசத்துரை சந்திரகாந்தன் 54,198


இரா.சாணக்கியன் - 33,332


கோவிந்தன் கருணாகரம் - 26, 382


ச.வியாழேந்திரன் - 22, 218


நஸீர் அஹமட் -17,599

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சி சார்பில் நாடாளு மன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவநேசத்துரை சந்திரகாந் தன் 54 ஆயிரத்து 198 விருப்பு வாக்குகளைப் பெற்று முத லிடத்தில் உள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சார்பில் தெரிவான இரா.சாணக்கியன் 33 ஆயி ரத்து 332 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் தெரிவான மற்றைய உறுப் பினரான கோவிந்தன் கரு ணாகரம் 26 ஆயிரத்து 382 வாக்குகளைப் பெற்று மூன் றாம் இடத்தில் உள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் ச.வியாழேந்திரன் 22 ஆயி ரத்து 218 வாக்குகளுடன் நான் காம் இடத்தையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நஸீர் அஹமட் 17 ஆயிரத்து 599 வாக்குகளுடன் ஐந்தாம் இடத்தையும் பெற்று நாடாளு மன்றத்துக்குத் தெரிவாகியுள் ளனர்.

### தோல்வியடைந்தவர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன் (25,303), சீ.யோகேஸ்வரன் (13,626) மற்றும் கி.துரைராஜசிங்கம் (9,650) ஆகியோர் தோல் வியடைந்துள்ளனர்.


தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சார்பில் போட்டியிட்ட கிழக்கு மாகாண சபையின் முன் னாள் உறுப்பினர் பூபாலபிள்ளை பிரசாந்தன் (15,554) மற்றும் சட்டத்தரணி ம.மங்களேஸ்வரி (15,202) ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவும் 10 ஆயிரத்து 343 விருப்பு வாக் குகள் மட்டும் பெற்று இம்முறை படுதோல்வி யடைந்துள்ளார்.

## நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து தமிழர்கள் வெற்றி

### ஜீவன் தொண்டமானுக்கு 1,9,155 விருப்பு வாக்குகள்











நுவரெலியா மாவட்டத்தில் 5 தமிழர்கள் நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி சார்பில் போட்டியிட்ட ஜீவன் தொண்டமான், மரு தபாண்டி ரமேஸ்வரன் ஆகி யோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட பழனி திகாம்பரம், வேலுசாமி இரா தாகிருஷ்ணன், மயில்வாக னம் உதயகுமார் ஆகியோ ரும் வெற்றி பெற்றுபெற்றுள் ளனர்.

இதில் இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸின் முன் னாள் தலைவர் அமரர் ஆறு முகம் தொண்டமானின் புதல்வனான ஜீவன் தொண் டமான் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 155 விருப்பு வாக் குகளைப் பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலிடத்தில் உள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விருப்பு வாக்குகளில் மஹிந்தர் சாதனை!

## 5,27,364 பெற்றார்



குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விருப்பு வாக்குகளில் முன்னிலையில் உள்ளார்.

இவர் 5,27,364 அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அதாவது கடந்த 2015 தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க 5,00,566 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அந்தசாதனையைதற்போது பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முறியடித்துள்ளார்.

நடைபெற்று முடிந்துள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

அக்கட்சி, 68 இலட்சத்து, 53ஆயிரத்து 693 வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 59.09 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு இன்னும் 5ஆசனங்களே குறித்த கட்சிக்கு தேவைப்படுகின்றது. எனவே அதனை தனக்கு ஆதரவானகட்சிகளுடன் இணைந்து 3/2பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பி. ஆசனம் ரணிலுக்கு?



ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்துள்ள ஒரே ஒரு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்காக அந்த கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பெயரிடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட எந்தவொரு உறுப்பினரும் வெற்றி பெறவில்லை. எனினும் பெற்றுக்கொண்ட வாக்கின் அடிப்படையில் ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் அக்கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பதவிக்காகக் கட்சிக்குள் உள்ளக மோதல் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக கட்சியின் தலைவருக்கு அந்தப் பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.


பொதுத் தேர்தலில் ஏற்பட்டுள்ள பாரிய தோல்விக்கான காரணத்தை கண்டறிவதற்கு கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் 5 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, சஜித் தலைமையிலான பெரும் எண்ணிக்கை உறுப்பினர்கள் வெளியேறியிருந்தனர். இதன் காரணமாக சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சியின் கீழ் அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு, 55 ஆசனங்களை வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க் 1977 ஆம் ஆண்டு முதல் – கடந்த 43 ஆண்டுகளாக – நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிருணிகா, பௌசி கொழும்பில் தோல்வி

## சுஜீவவும் 'அவுட்'







நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிக்கா பிரேமச்சந்திர, சுஜீவ சேனசிங்க, ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

அத்துடன், தமிழ் வேட்பாளர்களான வி.ஜனகன், சி.வை.பி.ராம் ஆகியோரும் நாடாளுமன்றம் தெரிவாகவில்லை.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவும் தோல்வியடைந்துள்ளார்.

# ஐ.தே.க. பிரபலங்கள் பதவி விலகத் தயார்!

ஐக்கிய தேசிய கட்சியின் பிரபலங்கள் பலர் தங்கள் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்யத் தயாராகி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சிக்குப் பாரிய தோல்வியை பெற்றுக் கொடுக்கும் தேர்தல் முடிவுகள் வெளியாகிய போதே பிரபலங்களுக்கு இடையில் அவசர கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில் ஒரே ஓர் ஆசனத்தை மாத்திரம் கைப்பற்றியது.

ஐக்கிய தேசிய கட்சியைப் பின்தள்ளி தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்க் காங்கிரஸ் போன்றவை முன்னிலையில் உள்ளன.

இலங்கையில் பாரம்பரிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சி படுமோசமான தோல்வியை தழுவிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும். கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் தமது கொழும்பு மாவட்டத்தில் தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலன்னறுவையில் மைத்திரி முன்னிலை

பொலன்னறுவை மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிக விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

அந்தத் தேர்தலில் 111,137 வாக்குகளை மைத்திரிபால சிறிசேன மொத்தமாக பெற்றுள்ளார்.

மேலும் பொலன்னறுவை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 180,847 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி 47,781 வாக்குகளையும் தேசிய மக்கள் சக்தி 6,792 வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 6,525 வாக்குகளையும் பெற்றுள்ளன.

அந்தவகையில் பொதுஜன பெரமுன கட்சிக்கு 4 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கு 1 ஆசனமும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவையைச் சந்தித்து முறையிட்டார் சசிகலா

(பிரபாகரன் டிலக்சன்)


இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை அவரது இல்லத்தில் சசிகலா ரவிராஜ் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள மாவை சேனாதிராஜாவின் இல்லத்திற்கு இன்று காலை 6 மணியவில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது நேற்றைய தேர்தல் முடிவுகள் தொடர்பாகவும் வாக்கெண்ணும் நிலையத்தில் காணப்பட்ட கள நிலைமைகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

நேற்றைய தினம் மத்திய வாக்கெண்ணும் நிலையத்திலிருந்து சசிகலா இடைநடுவில் அழுதவாறு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் ஹக்கீம், வேலு குமாருடன் அப்துல் ஹலீமும் வெற்றியடைந்தார்!







கண்டி, ஒக.07

கண்டி மாவட்டத்தில் ஒரு தமிழரும், இரு முஸ்லிம்களும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். வேலு குமார் (57,445), ரவூப் ஹக்கீம் (83,398) மற்றும் அப்துல் ஹலீம் (71,063) ஆகியோரே இம்முறையும் வெற்றி பெற்றுள்ளனர்.

கண்டியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு 8 ஆசனங்களும் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட தமிழர்கள், முஸ்லிம்களில் எவரும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் கடும் மழை





(தலவாக்கலை நிருபர்)

மலையகத்தில் கடும் மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் கொத்மலை ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. எனவே நீர்த்தேகத்திற்கு கீழ் தாழ் நிலப் பகுதியில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2020 இல் வெளியிடப்பெற்றது.